**செய்தி வெளியீடு எண்: 729** **நாள்: 05.12.2012**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**ஜெருசலேம் புனித பயணம் சென்றுவர தமிழக அரசின் சிறப்பு நிதி உதவி கோரி விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு நீட்டிப்பு**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்காக நபர் ஒருவருக்கு ரூ.20,000/– அரசு நிதி உதவி வழங்கும் திட்டம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் அறிவிக்கப்பட்டு, இதற்காக ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 500 கிறித்தவர்கள் ஜெருசலேம் சென்றுவர நிதி உதவி அளிக்கப்படும்.

இப்புனித பயணம் பிப்ரவரி 2013 முதல் மே 2013 வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் கிறித்தவர்கள் அதற்கான விண்ணப்பங்ககளை, **“ஜெருசலேம் புனித பயணத்திற்கான விண்ணப்பம்”** என்று அஞ்சல் உறையில் குறிப்பிட்டு **மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 807, (5வது தளம்), அண்ணாசாலை, சென்னை–600 002 என்ற முகவரிக்கு இம்மாதம் 5ஆம் தேக்குள்** அனுப்பும் படி கேட்டுக் கொள்ளப்பட்டது. தற்பொழுது இதுவரை விண்ணப்பிக்காத, புனித பயணம் மேற்கொள்ள ஆர்வமுள்ள கிறித்தவ பெருமக்களுக்கு மேலும் வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, **இக்காலக்கெடு நீட்டிக்கப்பட்டு, 20.12.2012 (வியாழக்கிழமை) வரை இதற்கான விண்ணப்பங்கள் பெறப்படும்** என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் தமிழ்நாட்டில் வசிக்கும் கிறித்தவராகவும், 01.01.2013 தேதியில் குறைந்தபட்சம் ஓராண்டு செல்லத்தக்க பாஸ்போர்ட் உடையவராகவும், வெளிநாடு பயணம் மேற்கொள்ள உடல் தகுதி மற்றும் மருத்துவ தகுதி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். பயணம் மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதி உதவி ரூ.20,000/– நீங்கலாக, மீதமுள்ள தொகையை பயண முகவருக்கு செலுத்த ஒப்புதல் அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அரசால் தேர்ந்தெடுக்கப்படும் பயண முகவர்கள் மூலமே பயணம் மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.tn.gov.in/bcmbcmw/welfschemes_minorities.htm என்ற இணையதளமுகவரியிலும் படியிறக்கம் செய்தும் பயன்படுத்தலாம்.

இந்த கால நீட்டிப்பை பயன்படுத்தி ஜெருசலேம் பயணம் மேற்கொள்ள ஆர்வமுள்ள அனைத்து கிறித்தவ பெருமக்களும், தமிழக அரசின் இச்சிறப்புத்திட்டத்தில் பங்கு பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**சிறுபான்மையினர் நல ஆணையர்**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**